**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 756/2025**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 17.11.2025.**

| | |
|---|---|
| **Name : முருகன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் அமரம்திட்டில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். எதிரியை எனக்கு தெரியும். கடந்த 2024ம் வருடம் மாலை 3 மணிக்கு மோட்டுப்பட்டி மதுபான கடை வழியாக சென்ற போது எதிரி சரவணன் என்னுடைய இருசக்கர வாகனத்தை நிறுத்துமாறு சொன்னார். நான் நிறுத்தினேன். அவர் என்னுடைய வண்டியிலிருந்த சாவியை எடுத்துக் கொண்டு ஒயின் ஷாப் சென்று எதிரிக்கு சரக்கு வாங்கி தருமாறு என்னை கேட்டார். நான் மறுத்துவிட்டேன். சாவியை எதிரியிடமிருந்து நான் சாவியை வாங்கிக் கொண்டு திரும்ப நடந்து வந்த போது எதிரி அவர் முதுகுக்கு பின்னால் வைத்திருந்த பீர் பாட்டில் ஒன்றை உடைத்து என் வயிற்றில் குத்தி காயம் ஏற்படுத்தினார்.

2) மீண்டும் மற்றொரு பீர் பாட்டிலால் முகத்தின் இடது பக்கம் பீர் பாட்டிலால் அடித்து இழுத்துவிட்டார். இடது காது அருகில் இருந்த நரம்பில் பட்டு ரத்தம் வந்தது. மயங்கிவிட்டேன். மேச்சேரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். அங்கு போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

அதிலுள்ள விவரம் எனக்கு தெரியும். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.3** ஆகும். உடைந்த நிலையில் உள்ள இரு பீர்பாட்டிலை என்னால் அடையாளம் சொல்ல முடியும். நீதிமன்றத்தில் உள்ள பீர் பாட்டில் உடைந்த கண்ணாடி துண்டை சாட்சி அடையாளம் காட்டினார். **சா.பொ.1** ஆகும். எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. அவருடைய வருகையின்மையால் அடையாளம் குறித்து ஆட்சேபனை செய்யமாட்டேன் என்று மனு வாயிலாக தெரிவிக்கப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் ஆமாம். என் மனைவி கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறார் என்றால் இல்லை என் மனைவி இறந்து 10 ஆண்டுகள் ஆகிறது. எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. அடித்த நபர் என் நண்பர் என்றால் பழக்கம். எத்தனை வருடம் பழக்கம் என்றால் 10, 15 வருட பழக்கம். நான் சென்ற பைக் யாருடைய பைக் என்றால் என் நண்பரின் பைக்.

4) எத்தனை மணிக்கு எங்கிருந்து சென்றேன் என்றால் மேச்சேரியிலிருந்து மதியம் 3 மணிக்கு சென்றேன். எதிரி ஒயின் ஷாப் அருகே இருந்தாரா என்றால் ஆமாம். நான் ஒயின் ஷாப் சென்று மது வாங்கினேனா என்றால் இல்லை, அப்போது தான் ஒயின் ஷாப்பிற்கு உள்ளே சென்றேன் என்றால் நான் சாலையில் நின்றேன். ஒயின் ஷாப்பிற்கு உள்ளே செல்லவில்லை.

5) எதிரி ஒயின் ஷாப்பிலிருந்து வந்து கொண்டிருந்தார். எதிரி எனக்கு நீண்ட நாள் நண்பர் என்பதால் என்னை பார்த்தவுடன் மது அருந்தவும் சீட்டு விளையாடவும் அழைத்தார் என்றால் ஆமாம். ஒயின் ஷாப்பிற்கு முன்பு உள்ள பீர்பாட்டிலை எடுத்து அடித்தாரா என்றால் ஆமாம். எதிரி தாக்கியதில் எனக்கு மயக்கம் வந்துவிட்டது.

6) சம்பவம் 10 முதல் 15 நிமிடம் நடந்தது. மது பான கடை முன்பாக கேமரா பொறுத்தப்பட்டிருந்ததா என்றால் ஆமாம். அதனை போலீசார் விசாரிக்கும் போது

எடுத்து பார்த்தார்களா என்றால் எனக்கு தெரியவில்லை. அருகில் உள்ள காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. மருத்துவமனைக்கு யார் என்னை அழைத்து சென்றது என்றால் என் பெரிய மகள் அழைத்து சென்றார்.

7) என் மகளுக்கு யார் தகவல் சொன்னது என்றால் ஆம்புலன்ஸ்காரர் சொன்னார். அடிபட்டவுடன் நான் நேரடியாக மருத்துவமனைக்கு சென்றேனா என்றால் ஆமாம். மருத்துவமனைக்கு எப்போது சென்றேன் என்றால் மயக்க நிலையில் இருந்ததால் எனக்கு மருத்துவமனைக்கு சென்ற நேரம் தெரியவில்லை.

8) அடிப்பட்டவுடன் அருகிலிருந்த ஒரு நபர் தான் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார் என்றால் ஆமாம். எத்தனை மணிக்கு என் மகள் வந்தார் என்றால் 4.45 மணிக்கு வந்தார். மேச்சேரி அரசு மருத்துவமனையிலிருந்து என்று சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் வியாழக்கிழமை சென்றேன்.

9) போலீசார் என்னை எத்தனை நாட்கள் கழித்து விசாரித்தார்கள் என்றால் இரண்டாவது நாள் விசாரித்தனர். விசாரிக்கும் போது எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு படிக்க தெரியாது. என் மகள் படித்து காண்பித்தாள்.

10) நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான் தான் அளவுக்கு அதிகமான மதுபோதையில் ஆஜர் எதிரியிடம் சண்டை போட்டு அந்த தள்ளு முள்ளுவில் சுயநினைவின்றி இருந்த நான் மதுபான கடைக்கு முன்புள்ள கண்ணாடி துகள்கள் மேல் விழுந்து காயத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. அந்த காயத்தை வைத்துக் கொண்டு எதிரி மீது வேண்டுமென்றே பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

D.Myilswamy

Digitally signed by D.Myilswamy
Date: 2025.11.18 10:38:53 +0530

Judicial Magistrate No.II,
Mettur.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 756/2025**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 17.11.2025.**

| | |
|---|---|
| **Name : பிரகாஷ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் எறகுண்டப்பட்டியில் குடியிருந்து தறி வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5** ஆகும். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) கடந்த 22.06.2024 ம் தேதி காலை 7 மணிக்கு நான் மற்றும் மணி இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் வரைந்த வரைபடத்திற்கு மகஜர் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

3) சம்பவ இடமான மேட்டுப்பட்டி ஒயின் ஷாப் அருகில் வரைந்த வரைபடத்திற்கு சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 22.06.2024 ம் தேதி காலை 8 மணிக்கு நான் மற்றும் மணி இருவரும் நின்று கொண்டு இருந்த போது காவல் துறையினர் சம்பவ இடத்திலிருந்து உடைந்த ஒழுங்கற்ற வடிவில் உள்ள காண்ணாடி பாட்டில் ஒன்று மற்றும் அதன் துகள்கள் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கைப்பற்றிய போது சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் சாட்சியாக கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை,

4) சம்பவ இடமான மேட்டுப்பட்டி ஒயின் ஷாப் அருகில் வழக்கு சொத்து கைப்பற்றிய போது சாட்சியாக இருந்து விட்டு தற்போது எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை

D.Myilswamy Digitally signed by D.Myilswamy Date: 2025.11.18 10:38:59 +0530

Judicial Magistrate No.II,
Mettur.